**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 13/2021

நாள் : 20.12.2022

பி.வா.சா.1 திருமதி. நபிசத்து தாஹிரா மனுவின்பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது தகப்பனார் மலேசியாவில் காலமானார். அந்த சமயத்தில் வாதியும் மலேசியாவில்தான் இருந்தார். நான் எனது தந்தை இறப்பிற்கு மலேசியாவிற்கு செல்லவில்லை. எனது அத்தை இல்முனிசா பீவியை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். இல்முனிசா எனது மாமனாரின் தங்கையாவார். எனது தந்தை இறப்பிற்கு வாதிதான் அனைத்து செலவுகளையும் செய்து இறுதி சடங்கை செய்தார் என்றும் வழக்கிற்காக எனது அத்தை இல்முனிசா செய்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்தை பொறுத்து எனது பெயருக்கு உயில் உள்ளது. தாவா 1வது இலக்க சொத்து ஆதியில் எனது அம்மாவின் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. அவர் பெயர் நூருதீன் ஆகும். பி.வா.சா.ஆ.4 உயில் வழக்கறிஞர் திரு. நடராஜனின் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. வாரிசு விபரங்களை எனது அம்மாதான் வழக்கறிஞரிடம் கூறினார். உயிலில் எனது அம்மா ரேகை ஏதும் வைக்கவில்லை. கையொப்பம்தான் செய்துள்ளார். பி.வா.சா.ஆ–4 ல் எனது தாயார் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றும் அதில் காணப்படுவது எனது தாயாரின் கையொப்பம் இல்லை என்றும் அந்த கையெழுத்தை நான் போலியாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. உயில் தயாரிக்கப்பட்ட சமயத்தில் நானும் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன். உயிலில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை. உயிலில் அல்தாப் உசேன், சைபுர் ரஹ்மான் ஆகியோர்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள். அல்தாப் உசேன் எனக்கு மாமா முறை ஆகும். சாட்சி சைபுர் ரஹ்மான் எனது சித்தப்பா முறையாகும். மேலே குறிப்பிட்ட

இருவரையும் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். உயில் தயாரிக்கும்போது அதை பதிவு செய்ய நினைக்கவில்லை. பி.வா.சா.ஆ.4 எனது தாயாரின் சுயநினைவுடன் சுயவிருப்பப்படி எழுதப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.

தாவா 2ம் இலக்க சொத்து மானாவாரி நிலமாகும். எனது தந்தையாரின் அம்மா ரஹிமாபீவிக்கு பாத்தியப்பட்டது ஆகும். ரஹிமாபீவிக்கு எனது தந்தை மற்றும் ஒரு மகள் இருந்தார். இருவரும் அவரது வாரிசு ஆவார். 2வது இலக்க சொத்தை பொறுத்து எனது பெயரில் பட்டா ஏற்பட்டு அதற்கு ஆதரவாக பி.வா.சா.ஆ.11 ஐ தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்தை மைக்கேல் மகன் அந்தோணிசாமி என்பவரிடமிருந்து நான் வாங்கியதாக பட்டா பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரஹிமாபீவி, அந்தோணிசாமிக்கு வாய்மூலமாகத்தான் கிரையம் செய்தார். வாய்மொழி கிரையம் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. வாய்மொழி கிரையத்தின் அடிப்படையில் அந்தோணிசாமிக்கு பாத்தியப்பட்டு பின்பு அவரிடமிருந்து இந்த சொத்தை நான் கிரையம் பெற்றிருந்தால் அதுவும் செல்லாது என்றால் சரியல்ல. வாதிதரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தை நான் எனக்கு தெரிந்தவர்கள் மூலம் படிக்க புரிந்துகொண்டேன். இன்றுவரை 2ம் இலக்க சொத்து நூருதீன் பெயரில்தான் பசலி உள்ளது என்றால் சரியல்ல. நூருதீன் என்பவர் எனது அம்மாவின் அப்பாவாகும். வாரிசு அடிப்படையில் வாதிக்கும் தாவா 2ம் இலக்க சொத்தில் பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

தாவா 3ம் இலக்க சொத்து எனது அப்பாவின் அப்பா இபுராஹிமுக்கு பாத்தியப்பட்டது ஆகும். ஆதியில் 3ம் இலக்க சொத்தில் உள்ள வீட்டில்தான் குடியிருந்தோம். அது பழமையான கட்டிடமானதால் தற்போது முதல் இலக்க சொத்தில் குடியிருக்கிறேன். 3வது இலக்க சொத்தை இடித்துவிட்டதால் அந்த மின் இணைப்பையே நான் முதலாம் இலக்க சொத்திற்கு பயன்படுத்தி வருகிறேன். அந்த மின் இணைப்பு எனது தாத்தா பெயரில்தான் தற்போதும்

உள்ளது.

பி.வா.சா.ஆ.8 ல் உள்ள சொத்து தாவா முதல் இலக்க சொத்தாகும். அதை எழுதும்போது நான் பதிவு அலுவலகத்திற்கு சென்றிருந்தேன். அந்த சொத்து ஆதியில் எனது அப்பாவின் அப்பா இபுராஹிமின் பெயரில் இருந்தது. எனது தாத்தா இபுராஹிம் எப்போது காலமானார் என்ற தேதி நினைவில்லை. எனது தாத்தாவிற்கு எனது அப்பா மற்றும் எனது அத்தை வாரிசுகளாவார்கள். பி.வா.சா.ஆ.8 ல் குறிப்பிடப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் எனது தாயார் பெயரில் எதுவும் இல்லை. எனது தாயாருக்கு பாத்தியம் இல்லாத ஒரு சொத்தை அவருக்கு பாத்தியமாக காண்பித்து சட்டத்தை ஏமாற்றி நான் பி.வா.சா.ஆ.8 ஐ ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கு வழக்கு சொத்துக்களில் பாகம் கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்தில் ஆவணங்களை வேண்டுமென்றே உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராது பிரகாரம் வாதிக்கு பாகம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

ம.வி. இல்லை

ஒப்பம்/ஜி. விஜயா,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்